of 1973), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

3. கவன ஈர்ப்பு

(1) தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டும், இதுவரையில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படாத காரணத்தால், 28—3—73 நாளிலிருந்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்வதாக அறிவித்திருந்தும், இப்போது அவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மதுரை மாவட்டம் தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முது நிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், தேவாரப்பட்டியிலுள்ள ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளியில் நிர்வாகத்தில் பலவிதமான முறைகேடுகள் இருந்ததனால், அப்பள்ளியின் ஏற்பையும் மானியத்தையும் ரத்து செய்து திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் 25—6—70 அன்று ஆணையிட்டார். அவ்வாணையினை எதிர்த்து பள்ளி நிர்வாகி சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் வழக்குத் தொடுத்தார். சென்னை உயர்நீதி மன்றம் மேற்கூறிய ஆணைகளுக்கு இடைக்காலத் தடையுத்தரவு அளித்தது. நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்க பள்ளியை ஏற்புடையதாகவே கருதி, 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. பின்னர், உயர்நீதி மன்றம், 29—10—71 அன்று பள்ளி நிர்வாகியின் ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது. ஆகவே, பள்ளியின் ஏற்பும், மானியமும் அந்நாளிலிருந்தே ரத்து செய்யப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப்பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து

1973 எப்ரல் 3] *[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]*

அப்பள்ளியில் வேலை செய்து வந்த 2 இடைநிலை ஆசிரியர்கள், 6 இளநிலை ஆசிரியர்கள் ஆகியவர்களில் 2 இடைநிலை ஆசிரியர்கள் கழக (அரசு) உயர்நிலைப் பள்ளியில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டனர். அரசு முன்னதாகவே இப்பொருளைப் பரிசீலனை செய்து, ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளியில் வேலை பார்த்து, அப்பள்ளியின் ஏற்பும் மானியமும் ரத்து செய்யப்பட்டதால் வேலையிழந்த ஆசிரியர்களுக்கு அவ்வட்டாரத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலை வாய்ப்பு அளிக்கத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

வேலையிழந்த ஆசிரியர்கள், அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கத்தோடு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்தின் முன்பு உண்ணாவிரதம் ஆரம்பித்தார்கள் எனவும், உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் முன்பே திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் அவ்வாசிரியர்களுக்கு ஆத்தூர் பஞ்சாயத்துக் கூட்டுமன்றப் பள்ளிகளில் வேலை கொடுப்பதற்காகத் தாம் எடுத்துவரும் நடவடிக்கைகளை விளக்கியுள்ளார் எனவும் அரசுக்குத் தகவல் வந்துள்ளது. உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்பும், திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் அவ்வாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் தான் எடுத்து வரும் உடனடி நடவடிக்கைகளை விளக்கி உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அவர்களும் அதற்குச் சம்மதித்துள்ளார்கள். மாவட்டக் கல்வி அலுவலர், திண்டுக்கல், இது குறித்து மேல் அறிக்கை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர், அவ்வட்டார ஊராட்சி ஒன்றியத்துக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மீதியுள்ள 6 ஆசிரியர்களையும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கோரி எழுதியுள்ளார். கிராம வளர்ச்சித் துறை இயக்குநருக்கும் அரசு இது குறித்துத் தக்க ஆணையிட்டு குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க மேல்நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இன்னும் மூன்று மாதத்திற்குள் அந்த ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசு உறுதி கூறுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விரைவில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டக் கல்வி அலுவலருக்கும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கும் எழுதியிருக்கிறார்கள்.

அதைத் தவிர கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். எப்படியும் விரைவில் அவர்களுக்கு வேலை கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

(2) வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்பைக் குறித்து.

பி.ப. 4–20 THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, on behalf of Thiru L. Balaraman, I wish to call the attention of the Hon. the Minister for Electricity to a matter of urgent public importance, namely, the heavy loss to the agriculturists since the crops about to be harvested and the standing crops have been affected due to the stoppage of power completely for the last three or four days in many parts of North Arcot district due to short supply of power.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 15—2—73 முதல் மின்சார வெட்டு 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதிலிருந்து விவசாயத்திற்காக தரப்படுகிற மின்சாரம் பகல் நேரத்தில் நான்கு மணி நேரத்திற்கும் இரவில் கையிருப்பைப் பொறுத்து இரவு 10 மணி முதல் மறு நாள் காலை 6 மணி வரை கொடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டது.

மார்ச் திங்கள் முதல் வாரத்தில் மாநில விவசாயப் பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சரை சந்தித்து சிலபல இடங்களில் 4 மணி நேரத்திற்குக்கூட மின்சாரம் தடையின்றி தரப்படுவதில்லை என்றும் அத்துடன் 4 மணி நேர சப்ளையை 6 மணி நேரத்திற்கு உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இக்கோரிக்கையை ஆராய்ந்தபின் வேலூர் மின் திட்டப் பகுதியில் விவசாய மின் இணைப்புகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முதல் பிரிவுக்கு காலை 4 மணி முதல் 9 மணி வரையிலும் இரண்டாவது பிரிவுக்கு காலை 8½ மணி முதல் பகல் 1½ மணி வரையிலும், மூன்றாவது பிரிவுக்கு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரையிலுமாக ஒவ்வொரு பிரிவுகளும் 5 மணி நேரத்திற்கு பரீட்சார்த்தமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நெய்வேலி அனல் மின் நிலையத்தில் மார்ச் திங்கள் 23, 24-லும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் மார்ச் திங்கள் 25, 26, 27-ஆம் தேதிகளில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகவாட் கொதிகலனிலுள்ள குழாய்களில் பழுது